உ
விநாயகர் துணை



# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
## கேர்ணிங்,டென்மார்க்

## *கும்பாபிஷேகதின சங்காபிஷேக விஞ்ஞாபனம்*
## *23-10-2024 புதன்கிழமை*

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

சீரும் திருவும் பொலிந்து, சிவசீலர்கள் நிறைந்து, விளங்கும் புண்ணிய பூமியாகிய டென்மார்க் நாட்டின்கண்ணே கோ்ணிங் மாநகரில் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானின் **கும்பாபிஷேகதின சங்காபிஷேக உற்சவம்** நிகழும் மங்களகரமான குரோதி வருடம் **ஐப்பசி மாதம் 7ம் நாள் (23-10-2024) புதன்கிழமை** காலை 08.00 மணிக்கு சங்கற்பத்துடன் ஆரம்பமாகி எம்பெருமான் விநாயகருக்கு **பகல் 11.00 மணிக்கு அஷ்டோத்திரசத (108) சங்காபிஷேகமும்**, ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு **அபிஷேகமும்** சிறப்பாக நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

### *கிரியாகால விபரம்*

***ஐப்பசி 6ம் நாள் 22-10-24 செவ்வாய் மாலை 6.00 மணிக்கு***

*விநாயகவழிபாடு, புண்யாகவாசனம், அனுக்ஞை, கணபதிஹோமம், வாஸ்துசாந்தி, கடஸ்தாபனம், கும்பம் யாகசாலைப்பிரவேசம், யாகபூசை, வேதபாராயணம், ஆசீர்வாதம், பிரசாதம் வழங்குதல்.*

***ஐப்பசி 7ம் நாள் 23-10-24 புதன் காலை 08.00 மணிக்கு***

*புண்யாகவாசனம், யாகபூசை, விஷேடதிரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதபாராயணம், ஆசீர்வாதம், பஞ்சபுராணம், யாத்திராதானம், கும்பம் வீதியுலாவருதல், மஹாசங்காபிஷேகம், ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு அபிஷேகம், விஷேடபூசை, பிரசாதம் வழங்குதல்.*

***பகல் அன்னதானம் வழங்கப்படும்.***

***மாலை 19.00 மணிக்கு:*** *பூசை,வசந்தமண்டபப்பூசை, திருவூஞ்சல், சுவாமி உள்வீதியுலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.*

***குறிப்பு:*** *பூ பால், பழம், தயிர், பூமாலை முதலியன அன்பளிப்புச் செய்யவிரும்புவோர் அபிஷேகம் தொடங்குவதற்கு முன்னர் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**தொடர்புகளுக்கு 97-225511 , 29253851**

நன்றி

இங்ஙனம்

*பரிபாலனசபையினர்*

www.pillayar.dk